30.10.2025

CC No. 217/2024

ம.சா. 1 பழனியப்பன், த/பெ. பெரியகருப்பன், பொய்யலூர்.

குறுக்கு விசாரணை

1) நான் தாக்கல் செய்துள்ள புகார் மனுவில் எதிரியை எப்படி தெரியும் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி என்னிடம் எந்த தேதியில் பணம் கேட்டார் என்ற விபரத்தை எனது புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி என்ன தொழில் செய்கிறார் என்றும், என்ன தேவைக்காக பணம் கேட்டார் என்ற விபரத்தை எனது புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி எனக்கு வட்டி தொகையை ரொக்கமாக கொடுத்தாரா, வங்கி மூலம் கொடுத்தாரா அல்லது G-pay மூலம் கொடுத்தாரா என்ற விபரத்தை மனுவிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் என்ன தொழில் செய்கிறேன் என்ற விபரத்தை எனது மனு மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி எனக்கு குடும்ப நண்பர் என்றால் குடும்ப நண்பர் இல்லை பக்கத்து ஊர்க்காரர். எதிரி பக்கத்து ஊர்க்காரர் என்று பொய் சொல்கிறேன் என்றால் எதிரி எங்கள் ஊருக்கு பக்கத்து ஊரில் திருமணம் செய்துள்ளார். எதிரி எனது ஊருக்கு பக்கத்து ஊரில் திருமணம் செய்துள்ளதால் அந்த பழக்கத்தின் அடிப்படையில் கடன் கொடுத்தாக மனுவிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) எங்கள் ஊருக்கு அருகில் உள்ள ஊர் பாடத்தான்பட்டி. பாடத்தான்பட்டியில் வசிக்கும் அந்தோணிச்சாமி, த.பெ. அருளானந்து என்பவரை எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரியை எத்தனை முறை பார்த்துள்ளேன் என்றால் எதிரியை 20, 30 முறை பார்த்திருக்கிறேன். அதன் அடிப்படையில்தான் பழக்கம். 01.01.2024 முதல் 31.12.2024 வரையிலான எனது இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, செம்பனூர் கிளை சேமிப்பு கணக்கிற்குண்டான கணக்கு பட்டியலை தாக்கல் செய்ய தயாரா

என்றால் தயாராக இருக்கிறேன். பாடத்தான்பட்டியில் வசிக்கும் அந்தோணிச்சாமி, த.பெ. அருளானந்து என்பரிடம் நான் ஆடு மேய்பது, ஆடு வியாபாரம் போன்ற வேலையை செய்கிறேன் என்றால் நான் அவரிடம் செய்யவில்லை. நான் தனியாக செய்கிறேன். எதிரி என்ன தொழில் செய்தார் என்ற விபரத்தை எனது மனுவிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் எதிரி என்ன தொழில் செய்கிறார் என்று தெரியாது. எதிரி தேவகோட்டையில்தான் நிரந்தரமாக வசித்து வருகிறார் என்றும், True way என்ற நிறுவனத்தில் முதலீடு செய்து வருவாய் கிடைத்தது என்றும், அதன் அடிப்படையில் அவரது உறவினரான பாடத்தான்பட்டியில் வசிக்கும் அந்தோணிச்சாமி, த.பெ. அருளானந்து என்பவரும் பெரிய தொகையை முதலீடு செய்திருந்ததாகவும், இந்நிலையில் True way நிறுவனம் பொருளாதார சிக்கலில் மாட்டிக்கொண்டு முதலீட்டாளர்களுக்கு பணத்தை திருப்பி கொடுக்க முடியாததால் எதிரியின் மூலமாக முதலீடு செய்த பாடத்தான்பட்டியில் வசிக்கும் அந்தோணிச்சாமி, த.பெ. அருளானந்து என்பவர் முதலீடு செய்த தொகைக்காக எதிரியை மிரட்டி தாவா வழக்கு காசோலை உட்பட 3 காசோலைகளையும், 3 கடனுறுதி சீட்டுக்களையும் பூர்த்தி செய்யாமல் கையொப்பம் மட்டும் செய்து பெற்றுக்கொண்டார் என்றும், மேற்படி 3 காசோலைகளில் ஒரு காசோலை தாவா வழக்கு காசோலையையும், மேற்படி கடனுறுதிசீட்டுக்களில் ஒன்றையும் பூர்த்தி செய்து என்னை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

3) பாடத்தான்பட்டியில் வசிக்கும் அந்தோணிச்சாமி, த.பெ. அருளானந்து என்பவர் மேல் 28.09.2024 ம் தேதி எதிரி தாவா வழக்கு காசோலை உட்பட 3 காசோலைகளையும், 3 கடனுறுதிசீட்டுகளை வைத்து வழக்கு தாக்கல் செய்யப்போவதாக மிரட்டியது சம்பந்தமாக தேவகோட்டை நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. புகார் கொடுத்த விபரம் தெரிந்தும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சிவகங்கை பொருளாதார குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் 20.09.2024 ம் தேதி எதிரி மூலமாக

True Way நிறுவனத்தில் யார் யார் மூலம் முதலீடு செய்யப்பட்டது என்ற விபரத்துடன் மேற்படி தொகைகளை பெற்று தருமாறு கேட்டு புகார் அளித்திருந்த விபரம் தெரியுமா என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. மேற்படி விபரம் தெரிந்தும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சிவகங்கை பொருளாதார குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் பாடத்தான்பட்டியை சேர்ந்த அந்தோனிச்சாமி த/பெ. அருளானந்து என்பவர் எவ்வளவு முதலீடு செய்த விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4) எதிரி கடந்த 20.09.2024 ம் தேதியே தாவா வழக்கு காசோலை உட்பட எதிரி கணக்கு வைத்துள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, தாழையூர் கிளையில் எதிரியின் மூலமாக True Way நிறுவனத்தில் முதலீடு செய்தவர்களுக்கு கொடுத்த காசோலைகளை stop payment செய்ய சொல்லி கடிதம் கொடுத்த நிலையில் தாவா காசோலையை எதிரி என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, கொடுத்திருக்கிறார். ம.சா.ஆ. 1 ஆவணமான வழக்கு காசோலையை அந்தோணி ஜெகன் என்பவர்தான் பூர்த்தி செய்தார் என்றால் சரிதான். தற்போது சாட்சி ம.சா.ஆ.1 ஆவணத்தை பார்த்து சாட்சியம் அளித்த பின்னர் அந்தோணி ஜெகன் என்பவர் காசோலையை பூர்த்தி செய்யவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார். ம.சா.ஆ. 7 ஆவணத்தை எழுதிய அந்தோணி ஜெகன் என்பவர் என் நண்பர் என்றால் சரிதான். ம.சா.ஆ.7 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ள ஆரோக்கியசாமி எனது நண்பர் என்றால் ஆடு வியாபாரம் மூலம் பழக்கம். ம.சா.ஆ.7 ஆவணத்தை பூர்த்தி செய்யாமல் கையொப்பம் செய்து பாடாத்தான் பட்டியை சேர்ந்த அந்தோணி என்பவருக்கு கொடுக்கப்பட்டதை அவரிடம் பெற்று எனக்கு வேண்டிய நபர்களை வைத்து பூர்த்தி செய்து தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளதாக எதிரி சொல்வது பொய்.

5) எதிரி என்னை பார்த்து இல்லை என்று சொன்னாலும், எதிரிக்கும் எனக்கும் எந்த பழக்கமும் இல்லை என்று சொனன்னாலும் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் இதற்கு முன்பு கொடுக்கல்

வாங்கல் இருந்ததா என்றால் சிறிய தொகை மட்டும் கொடுகல் வாங்கல் இருந்தது. எதிரிக்கும் எனக்கும் ஏற்கனவே கொடுக்கல் வாங்கல் இருந்த விபரத்தை மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி என்னிடம் ஒருபோதும் எந்த கொடுக்கல் வாங்கலும் வைத்திருக்கவில்லை என்றாலும், என்னிடம் எந்த கடன் தொகையையும் வாங்கவில்லை என்றாலும், அந்த கடனிற்காக கடனுறுதிசீட்டும் எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும் கடனை தீர்க்கும் வகையில் தாவா வழக்கு காசோலையை எனக்கு கொடுக்கவில்லை என்றாலும், நான் பாடத்தான்பட்டியை சேர்ந்த அந்தோணிச்சாமி என்பவரிடம் காசோலையை பெற்று அவருக்காக சட்ட விரோதமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மாத வருமானம் எவ்வளவு என்றால் ரூ.50 ஆயிரம் முதல் 1 லட்சம் வரை வரும். ஆடு மூலம் வரும் பணத்தை வங்கி மூலம் பரிவர்த்தனை செய்வேன் என்றால் இல்லை கையில் கொடுத்து வாங்குவதுதான். நான் தனியாக ஆடு வியாபாரம் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.10.30 18:26:22 +0530

விரைவு நீதிபதி, காரைக்குடி.( மு.கூ.பொ)